සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

**දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව**
**தென் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**Department of Education, Southern Province**

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව தென் மாகாணக் கல்வித் திணைக்களம் Department of Education, Southern Province

අවසාන වාර පරීක්ෂණය - 2024 (2025)
**இறுதி தவணைப் பரீட்சை - 2024 (2025) / Year End Term Test - 2024 (2025)**

| | | |
|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 9 | **இஸ்லாம் - I, II** | කාලය / நேரம் / Time: 2 மணித்தியாலம் |

නම / பெயர் / Name ..........................................................................  විභාග අංකය / சுட்டிலக்கம் / Index No. ..........................................

## பகுதி I

- மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

01) ஜாஹிலிய்யாக்கால அரபு மக்கள் ஏற்றுக்கொண்ட தௌஹீதின் பகுதி

1) உலூஹிய்யா 2) ருபுபிய்யா 3) ஸிபாத் 4) அஸ்மா

02) அல்குர்ஆன் முழுமையாக இறக்கியருளப்பட்ட ஆண்டுகள்.

1) 12 2) 13 3) 20 4) 23

03) “தேசப்பற்றும் தேசிய உணர்வும் இருப்பதால்தான் நாடுகள் வளமாகின்றன” இக்கூற்று யாருடையது.

1) அபூபக்கர் (ரழி) 2) உஸ்மான் (ரழி) 3) உமர் (ரழி) 4 அலி (ரழி)

04) நபி (ஸல்) அவர்களுக்கு முதல் வஹி இறங்கியபின், நபி (ஸல்) அவர்கள் மக்காவை விட்டும் விரட்டப்படுவார்கள் என எதிர்வு கூறியவர்.

1) வரகத் இப்னு நௌபல் 2) கதீஜா (ரழி)
3) ஸைத் (ரழி) 4) ஜிப்ரீல் (அலை)

05) இன, மத, குல வேறுபாடின்றி மிகச்சரியான முறையில் தீர்ப்பளித்து, உமர் (ரழி) இனால் கூபாவின் காழியாக (நீதிபதியாக) பதவி உயர்த்தப்பட்டவர்.

1) ஹுபைப் 2) ஷுரைஹ் 3) புரைஷ் 4) இப்னு ஷுரைஹ்

06) வரட்சிக்காலத்தில் மக்கள் தேவைக்காக தானியங்களை 7 வருடங்கள் சேர்த்து களஞ்சியப்படுத்தி வைத்த நபி

1) யூஸுப் (அலை) 2) யூனுஸ் (அலை) 3) ய∴கூப் (அலை) 4)இப்ராஹீம் (அலை)

07) சேர்த்தோ சுருக்கியோ தொழமுடியாத, உரிய நேரத்தில் மாத்திரம் நிறைவேற்ற முடிந்த தொழுகை.

1) ம∴ரிப் 2) லுஹர் 3) ஸுபஹ் 4) இஷா

08) அல்கர்னுஸ் ஸzஹபி நீர்ப்பரப்பில் முன்கூட்டியே 70 கப்பல்களை இறக்கிவைத்துப் புதுத்திட்டங்களுடன் கொன்ஸ்தாந்தைக் கைப்பற்றியவர்.

1) ஸலாஹுத்தீன் 2) நஜ்முத்தீன்
3) தாரிக் 4 முஹம்மத் அல் பாதிஹ்

09) முஸ்லிம்களின் முதல் கிப்லா

1) க.்.பதுல்லாஹ் 2) மஸ்ஜிதுன் நபவி 3) பைதுல் மக்திஸ் 4) மஸ்ஜிதுல் குபா

10) "நான் எனக்குரிய கபன் துணியை தயார்படுத்தி வைத்திருக்கிறேன். உமர் எனக்கு கபன் துணி அனுப்பினால், ஒன்றை தர்மம் செய்து விடுங்கள் எனக்கூறிய நபி (ஸல்) இன் மனைவி

1) ஸைனப் பினத் ஜஹ்ஷ் (ரழி) 2) ஸைனப் பின்த் ஹுஸைமா (ரழி)
3) மய்மூனா (ரழி) 4) கதீஜா (ரழி)

11) பைதுல் மக்திஸிற்கு அர்ப்பணிக்கப்பட்ட, மர்யம் (அலை) அவர்களுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட நபி

1) மூஸா (அலை) 2) ஸகரிய்யா (அலை) 3) யஹ்யா (அலை) 4) ஈஸா (அலை)

12) ஈஸா (அலை) அவர்களை முதலில் ஏற்ற சீடர்கள்

1) ஹவாரிய்யூன்கள் 2) பனு இஸ்ரவேலர்கள்

3) கிறிஸ்தவர்கள் 4) ஹனீப்கள்

13) ஜனாஸா தொழுகையில் 3ம் தக்பீருக்குப் பின் ஓதப்படுவது.

1) சூறா பாத்திஹா 2) ஸலாம்
3) நபி (ஸல்) மீது ஸலவாத் 4) ஜனாஸாவுக்குப் பிரார்த்தித்தல்

14) சேமிப்புப் பழக்கத்தைப் பாடமாகக் கற்றுத்தரும் எவ்விரண்டு பிராணிகள் அல்குர்ஆன் குறிப்பிடப்பட்டுள்ளன?

1) எறும்பு, காகம் 2) எறும்பு, தேனீ 3) தேனீ, நாய் 4) மாடு, காகம்

15) ஹஜ் கடமைகளில் நினைவுகூரப்படும் இரு நபிமார்கள்.

1) முஹம்மத் (ஸல்) , ஆதம் (அலை) 2) இஸ்ஹாக் (அலை), இப்ராஹீம் (அலை)

3) ஹாஜர் (அலை), இப்ராஹீம் (அலை) 4) இப்ரரீம் (அலை), இஸ்மாயீல் (அலை)

16) 7275 ஹதீஸ்களை உள்ளடங்கிய ஹதீஸ் நூல்

1) ஸஹீஹுல் புகாரி 2) ஸஹீஹுல் முஸ்லிம்
3) ஸஹீஹுத் திர்மதி 4) ஸஹீஹ் இப்னு மாஜா

17) காலை 9 மணிக்கு காலியிலிருந்து கண்டிக்குப் புறப்பட்ட நஸீர், இடையில் 2 மணிக்கு தொழுகைக்காக இறங்கி, லுஹரையும் அஸரையும் சேர்த்து தொழுதாரஹ். இச்செயல்

1) ஜம்உ தக்தீம் 2) ஜம்உ த.்.கீர் 3) ஜம்உ 4) கஸ்ரு

18) அபூபக்கர் (ரழி) காலத்தில் அல்குர்ஆன் தொகுக்கப்பட காரணமாக அமைந்த யுத்தம்.

1) ஹித்தீன் 2) பத்ர் 3) உஹத் 4) யமாமா

19) இஸ்லாத்தின் 2ம் சட்ட மூலாதாரம்.

1) குர்ஆன் 2) ஹதீஸ் 3) இஜ்மா 4) கியாஸ்

20) "நீங்கள் தொழுகையைக் கடைபிடித்து ஸகாத்தையும் கொடுத்து வாருங்கள்" இக்கூற்று

1) அல்லாஹ்வின் தூதருடையது 2) ஸஹாபாக்களுடையது

3) அல்லாஹ்வுடையது 4) இமாம் ஷாபிஈ உடையது.

**(20 x 2 = 40 புள்ளிகள்)**



සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki

# பகுதி - II

- **முதலாம் வினா கட்டாயமானது,**
- **முதலாம் வினாவுடன் சேர்த்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

(01)

01) உம்முஹாதுல் மு.·.மினீன் என்போர் யார்? அவர்களில் இருவரைப் பெயரிடுக.

02) நபி (ஸல்) அவர்களை நேசிப்பதை அரபியில் எவ்வாறு அழைப்போம்?

03) மூஸா (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட இரு அற்புதங்களை எழுதுக.

04) ஈஸா (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட இரு அற்புதங்களை எழுதுக.

05) இலங்கையில் பின்பற்றப்படும் சமயங்கள் நான்கை குறிப்பிடுக.

06) தர்மத்தின் காரணமாக நீண்ட கையுடையவர் என அழைக்கப்பட்ட நபி (ஸல்) அவர்களின் மனைவி யார்?

07) ஆண்களுக்கு ஹராமாக்கப்பட்டுள்ள ஆடை ஆபரணங்கள் 2 எழுதுக.

08) யுத்த காலத்தில் கடைபிடிக்க வேண்டிய மனிதநேயப் பண்புகள் 2 தருக.

09) நபி (ஸல்) காலத்தில் அல்குர்ஆன் பாதுகாக்கப்பட்ட இரு முறைகளை எழுதுக.

10) ஸகாத்தை முறையாக வழங்குவதனால் கிடைக்கும் நன்மைகள் 2 தருக.

**(10 x 02 = 20 புள்ளிகள்)**

(02)

1) நீர் விரயமாகும் சந்தரப்ப்ங்கள் 2 தருக.

2) பிறசமயத்தவர்களை மதித்தல் தொடர்பாக உமது நண்பருக்கு நீர் கூறும் ஆலோசனைகள் 3 எழுதுக.

3) ஹஜ்ஜதுல் விதாவில் நபி (ஸல்) அவர்களால் முன்வைக்கப்பட்ட 5 உபதேசங்களைச் சுருக்கமாக எழுதுக.

**(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)**

(03)

1) அல்குர்ஆன் ஓதப்படும் ஒழுங்கு எவ்வாறு அழைக்கப்படும்?

2) மஸ்ஜிதினுள் நுழையும் போதும் வெளியேறும் போதும் ஓதும் துஆவை எழுதுக. (அரபியில் / தமிழில் எழுதலாம்)

3) அபூபக்கர் (ரழி) அவர்களின் காலத்தில் அல்குர்ஆன் எவ்வாறு தொகுக்கப்பட்டது.

**(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)**

(04)

1) காத்தமுன் நபிய்யீன் என்பதன் கருத்து யாது? அச்சிறப்புக்குரிய நபி யார்?

2) ஹஜ்ஜின் அர்கான்களில் மூன்றைப் பட்டியலிடுக.

3) அல்குர்ஆன் மறுமை நாளைக் குறிக்கப் பிரயோகித்துள்ள 5 சொற்களை எழுதிக் காட்டுக.

**(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)**

(05)

1) அதிகமான மக்கள் பொடுபோக்காக இருக்கும் இரு அருட்கொடைகளும் எவை?

2) இரு வருட ஆட்சியில் அபூபக்கர் (ரழி) இன் சாதனைகள் இரண்டைக் கூறுக.

3) நடத்தைகளுடன் தொடர்பான ஹராம்கள் 5ஐ குறிப்பிடுக.

**(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)**

(06)

1) நாம் இலங்கையர் என்ற வகையில் எமது நாட்டுக்குச் செய்யவேண்டிய கடமைகள் 2 எழுதுக.

2) ஸூரத்துல் லுஹா தரும் படிப்பினைகள் 3 எழுதுக.

3) பொருள் எழுதுக.

   1. அஸ்மாஉல் ஹுஸ்னா
   2. யவ்முல் கியாமா
   3. ஹிஸாப்
   4. மு.ஃ.மின்
   5. இஸ்தி.ஃ.பார்

**(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)**

07) கீழே தரப்பட்டுள்ள நால்வரில் விரும்பிய இருவரைப் பற்றி 5 விடயங்கள் எழுதுக.

1. இமாம் புகாரி
2. இமாம் முஸ்லிம்
3. ஸலாஹுத்தீன் ஐயூபி
4. முஹம்மத் அல்பாதிஹ்

**(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)**



සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

<u>**விடைகள் (இஸ்லாம் தரம்: 09)**</u>

## பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1) | 2 | 11) | 2 |
| 2) | 4 | 12) | 2 |
| 3) | 3 | 13) | 4 |
| 4) | 1 | 14) | 2 |
| 5) | 2 | 15) | 4 |
| 6) | 1 | 16) | 1 |
| 7) | 3 | 17) | 1 |
| 8) | 4 | 18) | 4 |
| 9) | 3 | 19) | 2 |
| 10) | 1 | 20) | 3 |

**(2 x 20 = 40 புள்ளிகள்)**

## பகுதி II

**(01)**

1. நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்கள் (1புள்ளி ) கதீஜா (ரலி )ஆயிஷா (ரலி) ஜுவைரியா (ரலி) மைமூனா (ரலி) ஸவ்தா (ரலி ) (இருவரின் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பின் 1 புள்ளி
2. மஹப்பத்துர் ரஸூல்
3. கை பிரகாசித்தல், கைத்தடி பாம்பாக மாறுதல்
4. பிறவிக் குருடர்களை குஷ்டரோகிகளையும் குணப்படுத்துதல் இறந்தோரை உயிர்ப்பித்தல், மறைவான பொருட்களை அறிவித்தல்
5. இஸ்லாம்,இந்து, பௌத்தம், கிறிஸ்தவம்
6. ஸைனப் பின்த் ஜஹ்ஷ்(ரலி)
7. தங்கம், பட்டாடை பெண்களைப் போல் ஆடை அணிதல்
8. பொதுமக்களை கொலை செய்யக் கூடாது, வணக்கஸ்தளங்களை அழிக்கக்கூடாது, மத குருக்களை மதித்து நடத்தல்
9. மனனம்,எழுத்து
10. செல்வம் பெருகுதல், வறுமை நீங்குதல்

**(2x 10=20 புள்ளிகள்**

**(02)**

1. பொருத்தமான 2 எழுதியிருப்பின் இரண்டு புள்ளிகள்
2. பிற சமயத்தவரின் கடவுள்களுக்கு ஏசக்கூடாது, அவர்களின் உரிமைகள் பேணப் பட வேண்டும், பிற சமயத்தவர்களின் இன்ப துன்பங்களில் பங்களித்தல் (3எழுத வேண்டும்)
3. இணை வைக்கக் கூடாது, பெண்களை மதித்தல், அல்குர்ஆன் சுன்னாவை பின்பற்றுதல், அல்லாஹ்வுக்கு மட்டும் அடிபணிதல், தொழுகையைப்பேணல் மனிதர்கள் இடையே சமத்துவம் பேணல், பழிவாங்க கூடாது

**(2+3+5=10புள்ளிகள்)**

**(03)**

1. தர்த்தீபுத் திலாவத் - ஓதப்படும் ஒழுங்கு
2. • நுழையும் போது - அல்லாஹும்மப்தஹ்ளீ அப்வாப ரஹ்மதிக்க
   • வெளியேறும் போது - அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக மின் பல்ளிக
3. யமாமா யுத்தம், ஹாபில்கள் மரணம், உமர் (ரழி ) வற்புறுத்தல், ஸைத் பின் ஸாபித் தலைமையில் பொறுப்பு, முஸ்ஹப் தொகுப்பு

**(2+3+5=10புள்ளிகள்)**

**(04)**

1. நபிமார்களில் இறுதியானவர், முஹம்மத் (ஸல்) அவர்கள்
2. நிய்யத், ஸஃயு செய்தல், தலை முடி கலைதல், தவாபுல் இபாழா, அரபாவில் தரித்தல், ஒழுங்கு முறையில் செய்தல்
3. யவ்முல் பஃஸ், யவ்முல் ஹிஸாப், யவ்முல் கியாமா, யவ்முல் ஆகிரா, யவ்முத்தீன், யவ்முத் தகாபுன்

**2+3+5=10புள்ளிகள்**

**(05)**

1. ஓய்வு, ஆரோக்கியம்
2. அல்குர்ஆன் ஒன்றுதிரட்டுதல், போலி நபிமார் போராட்டம், இஸ்லாமிய ஆட்சியை பலப்படுத்தல்
3. பொய், ஏமாற்றல், பொறாமை, தீய வார்த்தை, பொய் சாட்சி, ஆபாசமான செயற்பாடுகள்

**2+3+5=10புள்ளிகள்**

**(06)**

1. நாட்டு மக்களுடன் இணக்கமாக வாழல்
   நாட்டின் சுகாதாரம், கல்வி வளர்ச்சிக்கு உழைத்தல், நாட்டு விடுதலைக்கு போராடல்
   நாட்டு மக்களை நேசித்தல்.
2. நல்லடியார்களை இறைவன் கைவிட மாட்டான், இம்மையை விட மறுமை சிறந்தது, அநாதைகளை கவனிக்க வேண்டும், இறைவனுக்கு நன்றி செலுத்தல்.
3. 1. அல்லாஹ்வின் அழகிய திருநாமங்கள்
   2. விசுவாசி / நம்பிக்கை கொண்டவர்
   3. மறுமை நாள்,
   4. பாவ மன்னிப்பு
   5. விசாரனை

**2+3+5=10புள்ளிகள்**

සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki

**(07)**

1) இமாம் புகாரி

முழுப்பெயர்--அபூ அப்துல்லாஹ் முஹம்மத் இஸ்மாயீல் அல் புஹாரி (ரஹ்)

பிறப்பு. ஹி.194 (புஹாராவில்,)- .

ஸஹீஹுல் புகாரி 7275 ஹதீஸ்கள்

- சிறுவயதிலே குர்ஆன், ஹதீஸ் மனனம்,அதிக ஹதீஸ்களை மனனம் செய்தவர்
- இளவயதில் தந்தையை இழந்தவர்

இறப்பு - ஹி. 256

2. இமாம் முஸ்லிம்

பிறப்பு ஹி-204முழுப்பெயர்--

அபுல் ஹஸன் முஸ்லிம் இப்னு ஹஜ்ஜாஜ்

- ஸஹீஹுல் முஸ்லிம் 4000 ஹதீஸ்கள்

ஆரம்பக்கல்வி-நைஸாபூரில்

இறப்பு ஹி. 261.

3. ஸலாஹுத்தீன் ஐயூபி

ஹி.532 ஈராக் திக்ரித் நகரில்

தந்தை - நூருத்தீன் ஸன்கி

அக்ஸாவை மீட்டெடுத்தல்

இறப்பு கி.பி 1193 ஹி 589இல்

4. முஹம்மத் அல் பாதிஹ்

பிறப்பு- 1432

தந்தை- இரண்டாம் முராத்

- சிறப்புப் பெயர் - அல் பாதிஹ்
- பல மொழிகளை கற்றவர்
- கொன்ஸ்தாந்து நோபிலை வெற்றிகொள்ளல்

இவரது ஆசிரியர்--ஆக்சமஸுதீன் பழம்

இறப்பு - ஹி 886

( சிறு குறிப்பில் குறித்த தலைப்பில்ஏதாவது 5விடயம் எழுதினால் 5 புள்ளிகள்)

**(5+5=புள்ளிகள்**

LOL Book Store

වාරෙටම ඕන කරන පොත් එකපාර
ඕඩර් කරලා දැන් ගෙදරටම ගෙන්වා ගන්න

# 25% OFF ALL BOOKS

Including Exercise Books, CR Books, and B5 Books



**ඕනෙම අභ්‍යාස පොතකට 25%ක විශේෂ වට්ටමක්**

**ORDER BOOKS FROM LOL BOOKS STORE**

0372060110 **WWW.LOL.LK**

071 777 4440 (WhatsApp)

**Cash On Delivery Available**



Order Term Test Papers, Short Note Books, Work books, and Revision Books in Sinhala, English & Tamil Medium
TERM TEST
SHORT NOTES
REVISION
LOL BOOK STORE
Cash on Delivery and KOKO Payment Available
WhatsApp - 0717774440
Website: www.lol.lk
Order all your books from LOL Book Store!